

# அஸ்வின் சுதர்சன், விராஜ் மெண்டிஸ் நினைவேந்தல், அஞ்சலி நிகழ்வுகள்

மறைந்த ஊடகவியலாளரும், கேலிச் சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் நினைவேந்தல் நிகழ்வும், தேசியப் பற்றாளர் விராஜ் மெண்டிஸின் அஞ்சலி நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமாரின் தலைமையில் நடைபெற்றன.

அஸ்வினின் திருவுருவ படத்திற்கு அஸ்வினின் பெற்றோர் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து தேசியப் பற்றாளர் விராஜ் மெண்டிஸின் திருவுருவ படத்திற்கு, யாழ் பல்கலைகழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ரகுராமும், ஊடக கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனனும் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அஸ்வின் மற்றும் தேசிய பற்றாளர் விராஜ் மெண்டிஸ் ஆகியோரின் நினைவுரைகள் இடம்பெற்றன. அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.


















